உதகமண்டலம் மாவட்ட நீதிமன்றத்தில் **2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 07–ஆம் நாள்** வாதி என்பவரின் சாட்சியாகிய **பி.சா.3**–ன் வாக்குமூலம் 1969–ஆம் ஆண்டு 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| O.S. No | : 7 of 2020 |
| பெயர் | : Reinia Ignatius Santy |
| தந்தை பெயர் | : Marceles Santy |
| வயது | : |
| தொழில் | : |
| கிராமம் | : |
| தாலுக்கா | : |

---

தேதி : 07.042026.

**<u>முதல் விசாரணை</u>:**

நான் ஊட்டியில் வசிக்கிறேன். நான் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் 1998ஆம் ஆண்டு முதல் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். நான் J.பிரபு என்ற மூத்த வழக்கறிஞரிடம் Junior வழக்கறிஞராக பணிபுரிந்து வந்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ–1 என்ற 30.03.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் 2வது சாட்சியாக கண்டுள்ள கையொப்பம் என்னுடையது. மேற்படி ஆவணத்தின் தரப்பினர்களை பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தை பதிவு செய்தபோது Identify செய்ததற்காக மேற்படி ஆவணத்தில் முதல் பக்கத்தில் பின்புறத்தில் கண்டுள்ள 2வது சாட்சியாகவும் நான் கையொப்பம் இட்டுள்ளேன். மேற்படி ஆவணத்தில் என்னுடன் மற்றொரு சாட்சியாக கையொப்பம் இட்டுள்ள நபர் அலாவுதினின் உறவினர் என்று சொன்னது மட்டும் எனக்கு தெரியும், மற்றபடி மேற்படி சாட்சியை பற்றிய விவரம் தெரியாது. அலாவுதின் மேற்படி

ஆவணத்தில் சாட்சிகளாகிய எங்கள் இருவர் முன்னிலையில் கையொப்பம் இட்டார். மேற்படி ஆவணத்தில் சாட்சிகளாகிய நாங்கள் இருவரும் அலாவுதின் முன்னிலையில் கையொப்பம் இட்டோம். அலாவுதின் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை அவரது விருப்பத்தின் அடிப்படையில்தான் ஏற்படுத்தினார்.

<u>குறுக்கு விசாரணை</u>:

செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்ய தாக்கல் செய்வதற்கு அந்த ஆவணத்தில் பயனாளி கையொப்பம் இடவேண்டியது என்பது கட்டாயம் இல்லை என்பது சரி. பி.சா.ஆ–1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்தும்போது அலாவுதினுக்கு 74 வயது என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டது. அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை என்னுடைய மூத்த வழக்கறிஞர் பிரபு தயார் செய்தார். இந்த வழக்கில் 1ஆம் பிரதிவாதிக்காக ஆஜராகி நடத்திவரும் வழக்கறிஞர் திரு.ஆனந்த் அவர்களும் மேற்படி வழக்கறிஞர் பிரபு அவர்களின் Junior வழக்கறிஞர் என்பது சரி. என் மூத்த வழக்கறிஞர் பிரபு 2022ஆம் ஆண்டில் இறந்துவிட்டார். என்னுடன் அதில் முதல் சாட்சியாக கையொப்பமிட்டவர் யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது, அவர் அலாவுதின் அவர்களின் உறவினர் என்று அப்பொழுது சொன்னார்கள். அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை தயார் செய்வதற்கு விவரங்களை எங்கள் அலுவலகத்தில் அலாவுதின் கொண்டுவந்து என் மூத்த வழக்கறிஞரிடம் கொடுத்தார். எங்கள் அலுவலகத்திற்கு அலாவுதின் அவ்வாறு வந்தபோது அவருடன் முதலாவது சாட்சி பாத்திமா உடன் வந்திருந்தாரா என்றால் ஆமாம், அவரும் உடன் வந்திருந்தார். உண்மையில் பி.சா.ஆ–1 ஏற்பட்ட சமயத்தில் அலாவுதின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் அவரால் குன்னுரில் இருந்து ஊட்டியில் உள்ள எங்கள் மூத்த வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அந்த ஆவணத்திற்கு விவரங்கள் சொல்ல

வந்திருக்க முடியாது என்றால் தவறு. அலாவுதின் அவ்வாறு செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்த விரும்பியிருந்தால் அதில் சாட்சிகளாக கையொப்பமிட அவரது உறவினரையோ நண்பரையோ குன்னுரில் இருந்து அழைத்து வந்திருப்பார் என்றும் என்னை அதில் சாட்சி கையொப்பமிட அழைத்திருக்க மாட்டார் என்றும் சொன்னால் தவறு. அலாவுதின் கேட்டதின் பேரில்தான் நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்று சாட்சி கூறுகிறார். முதல் பிரதிவாதி கேட்டு கொண்டதற்காக பி.சா.ஆ–1 செட்டில்மெண்ட் பத்திரத்தை அவர் விருப்பத்தின் அடிப்படையில் நாங்கள் தயார் செய்துள்ளோம் என்று சொன்னால் தவறு. எங்கள் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்ட பி.சா.ஆ–1ல் சாட்சி கையொப்பம் போட்டு கொடுத்ததற்காக நான் உண்மை விவரங்களை மறைத்து 1ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் என் சாட்சியம் ஏற்க தகுந்தது இல்ல என்றும் சொன்னால் தவறு.

**மறு விசாரணை** : இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.04.07 16:03:42 +0530